# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நந்தன, பங்குனி 12, திருவள்ளுவர் ஆண்டு–2044

## 2013 மார்ச் 25, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி."*

*எல்லோரும் ஒழுக்கத்தினால் சிறந்த முன்னேற்றம் அடைவர். ஒழுக்கத்திலிருந்து தவறினால் அடையக்கூடாத பெரும் பழியை அடைவர்.*

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கே.வி. வேணுகோபால் அவர்கள் 16–2–2013 அன்றும் மற்றும் திரு. அ.க. அரங்கநாதன் அவர்கள் 28–2–2013 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. கே.வி. வேணுகோபால் அவர்கள் 1985 முதல் 1988 வரை தளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றினார்.*

*திரு. அ.க. அரங்கநாதன் அவர்கள் 1977 முதல் 1980 வரை வேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்.*

*இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**46—**

### துணை மின் நிலையம்

***22241—திரு. எம். ரெங்கசாமி:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் நகரத்திலுள்ள கருந்தட்டாங்குடி, விளார் ஆகிய பகுதிகளிலுள்ள 33 கி.வோ. துணை மின் நிலையங்களை 110 கி.வோ. துணை மின் நிலையங்களாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா ?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தஞ்சாவூர் நகரிலுள்ள கரந்தை (கருந்தட்டாங்குடி) துணை மின் நிலையத்தை 12–வது ஐந்தாண்டு பெருந்திட்டத்திலே 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், விளாரிலுள்ள 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.*